முருகப்பெருமான் துணை

***இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கைப்பட எழுதிய நூலாகும்***
***இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்***

**துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு**
**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**
**பாகம்: 574**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

**25.04.2021**, ஞாயிற்றுக்கிழமை

1. ஞானஆனந்த சற்குருவே
ஞானிகள் துணைகொண்ட ஞான உருவே
ஞானபண்டிதன் என் சக்தியாக உள்ள
ஞானியே ஆறுமுக அரங்கனே உந்தனுக்கு
2. உந்தனுக்கு ஞான அறிவுரை ஆசி
அருளுவேன் சுப்ரமணியர் யானும் இனிதே
சிந்தை வைத்து உந்தன்திருவடி பற்றிய
செப்பிடுவேன் உலகோர்க்கு சித்தி முத்தி உறுதியாகும்
3. ஆகவே உந்தனுள் என்சக்தி நிரம்பி இருக்க அரங்கன் உன் கரம்பட்ட மக்களுக்கெல்லாம்
மக்களுக்கெல்லாம் ஆறுமுகன் என் அருளும் சித்தியும் உண்டு உண்டு
மாற்றம் செய்து அவர்களையும் அரங்கன் நீவேண்ட
ஆற்றல்பட ஞானி ஆக்கி உலக மாற்றம் அற்புதம்பட ஆறுமுகன் யான் நிகழ்த்துவேன்
4. நிகழ்த்தவே நீயே கலியின் சிறந்தகுரு
நிலை தன்மை கொண்ட ஞானகுரு
ஏற்பு கொண்டு உன்வழி உலகம் வர வரவே
இந்த உலகம் பெருமாற்றம் காணக்கூடும்
5. காணவே அரங்கனே கலியின் சிறந்த தவசியே
கண்கண்ட தெய்வமாய் உலகோர்க்கு
கலியுகத்தில் நீ என்சக்தியாய் விளங்கி
கலியுக மாற்றம் ஞானயுகமாக்கி அருள்புரிவாய்
6. அருளவே வரமீந்தேன் ஆறுமுகன்
அருளாக உந்தனுள் இணைந்தேன் யான்
வரமென எந்தன் சக்தி பெருகிவர
வையகத்தில் உன் பேர்புகழ் ஐயமற தவமாக தர்மமாக நிலைக்கும்
7. தவமாக தர்மமாக நிலைத்து தரணியில் அற்புதங்கள் காணக்கூடும்
காணவே அரங்கனே குடிலை காத்து கலியுகத்தில் உன்தொண்டர்களை காத்து
ஞானமாக எங்கும் பரவி ஞானயுக மாற்றத்திற்கு
யானே உந்தன் சூட்சுமமாய் நிரம்பி இருக்கின்றேன்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–

*ஐயன் வேலவன் அடியினைப் போற்றிட*
*வையகம் போற்ற வாழ்வார் நலமே!*
*பற்றறுத்த வேலவன் பதத்தை பற்றிட*
*நற்றவமும் சித்திக்கும் நமனும் அஞ்சுவன்!*
*ஆட்சிதான் மாற்றமும் அருளுவான் வேலனும்*
*மாட்சிமை மிக்க மக்கள் வாழவே!*

துறையூர் ஓங்காரக்குடில் மூலமாக ஆசான் முருகப்பெருமான் ஆசியால் 20 கோடி பேர்களுக்கு மேலாக தொடர்ந்து அன்னதானம் செய்து வருகிறோம். இனிவரும் காலங்களிலும் முருகப்பெருமான் துணையுடன் மேன்மேலும் சிறப்பாக அன்னதானம் செய்வோம்.

– ஆறுமுக அரங்கமகா தேசிகர்.